பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**10 05 2026** **6 45**

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** தமிழக முதலமைச்சராக தமிழக வெற்றிக் கழகத் தலைவர் திரு விஜய் இன்று பதவியேற்கிறார்.

**2.** இம்மாதம் **13**ஆம் தேதிக்குள் சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என்று ஆளுநர் திரு. ராஜேந்திர விஷ்வநாத் அர்லேகர் உத்தரவிட்டுள்ளார்.

**3.** மக்களுக்கு குறைந்த செலவில் காப்பீடு மற்றும் ஓய்வூதிய பலன்கள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் சமூக பாதுகாப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

**4.** தமிழகத்தில் அநேக இடங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**5.** ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில், குஜராத் அணி **77** ரன் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தமிழக முதலமைச்சராக தமிழக வெற்றிக் கழகத் தலைவர் திரு விஜய் இன்று பதவியேற்கிறார்.

சென்னையில் உள்ள நேரு உள் விளையாட்டரங்கில் இன்று காலை 10 மணிக்கு பதவியேற்பு விழா நடைபெறுகிறது.

முதலமைச்சராகப் பதவியேற்கும் திரு விஜய்க்கு, ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் பதவிப் பிரமாணமும், ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைக்கிறார்.

அவருடன் 9 பேர் அமைச்சர்களாக பதவியேற்கின்றனர்.

முன்னதாக தமிழக ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர்-ஐ நேற்று சந்தித்த திரு. விஜய், தமக்கு 120 சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு வழங்கும் கடிதங்களை சமர்ப்பித்து, மாநிலத்தில் ஆட்சியமைக்க அழைக்குமாறு உரிமை கோரினார்.

இதனையடுத்து, ஆளுநர், திரு விஜய் முதலமைச்சராக நியமனம் செய்ததற்கான ஆணையைப் பிறப்பித்தார்.

மேலும் வரும் 13ஆம் தேதிக்குள் சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என்று ஆளுநர் உத்தரவிட்டுள்ளார்.

புதிதாக ஆட்சியமைக்க உள்ள திரு. விஜய் தலைமையிலான அரசுக்கு முன்னாள் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட தலைவர்கள் பலர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இந்த பதவியேற்பு விழாவை பொதுமக்கள் காணும் வகையில் சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 23 இடங்களில் எல்இடி திரைகள் வாயிலாக நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

பதவியேற்பு விழாவையொட்டி, நேரு உள் விளையாட்டரங்கம் அமைந்துள்ள பகுதி உட்பட முக்கிய இடங்களில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்பட்டுள்ளன.

<<<<>>>>

மக்களுக்கு குறைந்த செலவில் காப்பீடு மற்றும் ஓய்வூதிய பலன்கள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் சமூக பாதுகாப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

சமூக பாதுகாப்புத் திட்டங்கள் தொடங்கப்பட்டு 11 ஆண்டுகள் நிறைவடைவதை ஒட்டி, புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய நிதியமைச்சர், குறைந்த செலவில் மக்களுக்கு காப்பீடு மற்றும்

ஓய்வூதிய பலன்கள் கிடைப்பதை நோக்கமாகக் கொண்டு இந்த திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

வங்கிகள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்களின் களப் பணியாளர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரின் அர்ப்பணிப்பு மிக்க முயற்சிகளி ன் காரணமாக இத்திட்டங்கள் வெற்றி பெற்றுள்ளதற்கு திருமதி நிர்மலா சீதாராமன் பாராட்டு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய இணையமைச்சர் திரு. பங்கஜ் சௌத்ரி, சமூக பாதுகாப்புத் திட்டங்கள் விளிம்பு நிலையில் உள்ள மக்களுக்கு நிதிசார் பாதுகாப்பை வழங்குவதாக தெரிவித்தார்.

இத்திட்டங்களை டிஜிட்டல்மயமாக்குவதன் மூலம் பதிவு மற்றும் உரிமை கோரல் நடவடிக்கைகளை எளிதில் மேற்கொள்ள உதவிடும் என்று திரு. பங்கஜ் சௌத்ரி குறிப்பிட்டார்.

<<<<>>>>

கண் மருத்துவத்தில் இந்தியா உலகின் முன்னணி நாடாக திகழ்கிறது என்று பாதுகாப்புத்துறை இணையமைச்சர் திரு. சஞ்சய் சேத் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உள்ள ராணுவ மருத்துவமனையில் கண் மருத்துவ மேம்பாடு குறித்த 2 நாள் மாநாட்டை தொடங்கி வைத்துப் பேசினார்.

மருத்துவர்களின் திறன் மற்றும் அர்ப்பணிப்பு உணர்வு காரணமாக ஏராளமானோருக்கு பார்வை கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாட்டை கட்டமைப்பதிலும், மனிதாபிமான சேவைகளை வழங்குவதிலும் மருத்துவர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களின் சேவை முக்கியப் பங்கு வகிப்பதாக திரு. சஞ்சய் சேத் கூறினார்.

<<<<>>>>

கடற்கரையை தூய்மைப்படுத்தும் இயக்கம் மக்கள் இயக்கமாக கொண்டு செல்ல வேண்டியதன் அவசியத்தை மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்தர் சிங் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் கலந்கொண்டு பேசிய அவர், தூய்மையான கடற்கரை, பாதுகாப்பான கடற்கரை என்ற பிரச்சார இயக்கம் செப்டம்பர் 12ஆம் தேதி முதல் ஒரு வார காலத்திற்கு நடைபெறும் என்று கூறினார்.

ப்ருத்வி திட்டத்தின்கீழ் மக்கள் பங்கேற்புடன் கடல்நீர் தர மதிப்பீடு, குப்பைகளை அகற்றுவது மற்றும் கடற்கரை அரிப்பு தடுப்பு

போன்ற மத்திய அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் நீண்டகால நடவடிக்கைகள் குறித்தும் அவர் விரிவாக எடுத்துரைத்தார்.

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் உதவியுடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான முன்மாதிரியாக இந்தியாவில் கடலோர பாதுகாப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் அநேக இடங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்கிழக்கு அரபிக் கடல் மற்றும் அதனையொட்டிய கடல் பகுதிகளில் நிலவும் வளிமண்டல சுழற்சி காரணமாக அடுத்த 5 நாட்களுக்கு பரவலாக மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நாளை குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், நீலகிரி கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், கரூர், நாமக்கல், திருச்சி, திண்டுக்கல், மதுரை, தேனி, தென்காசி, விருதுநகர், திருநெல்வேலி,

கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களில் பலத்த காற்றுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

மன்னார் வளைகுடா மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் நிலவும் வளிமண்டல சுழற்சி காரணமாக அடுத்த 24 மணி நேரத்தில் தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக கூடும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

சென்னையை பொறுத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

நீலகிரி மாவட்டம் உதகையில் கோடை விடுமுறையையொட்டி சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

ஆண்டுதோறும் கோடை சீசனையொட்டி நடைபெறும் மலர்க் கண்காட்சிக்காக முன்னேற்பாட்டுப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Saravanan — 43 Sec)**

<<<<>>>>

***<u>இருவரிச் செய்திகள்</u>***

ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் தடையற்ற கப்பல் போக்குவரத்தை உறுதி செய்யும் வகையில் **HMS Dragon** போர்க் கப்பலை அப்பகுதிக்கு அனுப்ப உள்ளதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது.

------------

மேற்கு ஆசியாவில் நிலவி வரும் பதற்றமான சூழலில், போர் நிறுத்தத்திற்கான **14** அம்சத் திட்டத்திற்கு ஈரானின் முறையான பதிலுக்காகக் காத்திருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

------------

யுக்ரைன் உடனான போரில் ரஷ்யா வெற்றி பெரும் என்று அந்நாட்டு அதிபர் திரு விளாடிமிர் புடின் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

------------

பாகிஸ்தானில் உள்ள கைபர் பக்துன்குவா மாகாணத்தில் தீவிரவாதிகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையேயான துப்பாக்கிச் சூடு மற்றும் தகொலைப் படைத் தாக்குதலில் மூன்று காவலர்கள் உயிரிழந்தனர்.

------------

தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் கீழப்புளியங்குடி பகுதியில் உள்ள நெல் கொள்முதல் நிலையத்தில், நெல்லைப் பாதுகாக்க மேற்கொள்ள வேண்டிய கூடுதல் நடவடிக்கை குறித்து ஆட்சியர் திரு விஷு மகாஜன் ஆய்வு மேற்கொண்டார்.

------------

**108** வைணவ தலங்களில் முதன்மையானதும், பூலோக வைகுண்டம் என போற்றி வணங்கப்படும் ஸ்ரீரங்கம் அருள்மிகு ரெங்கநாதர் ஆலயத்தில் சித்திரை திருவிழாவையொட்டி நம்பெருமாள் தங்க கருடசேவை வெகு விமர்சையாக நடைபெற்றது.

------------

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை அருகே யானை தாக்கி விவசாயி ஒருவர் சம்பவ இடத்திலே உயிரிழந்தார்.

------------

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில், குஜராத் அணி **77** ரன் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணியை வென்றது.

ஜெய்ப்பூரில் நேற்று நடைபெற்ற போட்டியில், முதலில் ஆடிய குஜராத் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 229 ரன் எடுத்தது.

சுப்மன் கில் 44 பந்துகளில் 84 ரன்னும், சாய் சுதர்சன் 36 பந்துகளில் 55 ரன்னும் எடுத்தனர்.

230 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ராஜஸ்தான் அணி, 16 புள்ளி 3 ஓவரில் 152 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில், சென்னை அணி - லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில், இப்போட்டி மாலை மணி 3.30க்கு தொடங்குகிறது.

--------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பெங்களூரு அணி 1-0 என்ற கோல் கணக்கில் ஜாம்ஷெட்ப்பூர் அணியை வென்றது.

இன்று மாலை 5 மணிக்கு நடைபெற உள்ள ஆட்டத்தில் கேரள அணி - மொஹமதன் அணியையும், இரவு மணி 7.30க்கு நடைபெற

உள்ள மற்றொரு ஆட்டத்தில், சென்னை அணி - ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியையும் எதிர்கொள்கின்றன.

----------------

தாஷ்கண்ட்டில் நடைபெற்று வரும் பதினைந்து வயதிற்குட்பட்டோருக்கான ஆசிய குத்துச் சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியாவைச் சேர்ந்த 9 வீரர்கள் பல்வேறு பிரிவுகளில் இறுதி போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

------------

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் மாநில அளவிலான ஆடவர் ஹாக்கி போட்டிகள் நேற்று தொடங்கின.

இம்மாதம் 13-ம் தேதி வரை நடைபெறும் இப்போட்டியில், 32 மாவட்ட அணிகள் பங்கேற்கின்றன.

இப்போட்டியில் சிறப்பாக விளையாடும் வீரர்கள், புவனேஸ்வரில் நடைபெறும் தேசிய சீனியர் ஹாக்கி போட்டியில், தமிழகம் சார்பில் விளையாடத் தேர்ந்தெடுக்கப்படுவர்.

**<<<<The End>>>>**